தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்த அனைத்துக் கலைஞர்களினதும் நினைவாக

10 ஆவது முறையாக நடாத்தும்



தமிழீழ எழுச்சிப்பாடல் போட்டி

விண்ணப்பப் படிவமும் விதிமுறையும்

Tamilar Remembrance Foundation – Swiss
Postfach 439, 4528 Zuchwil

எழுச்சிக்குயில் 2025

(தமிழீழ எழுச்சிப்பாடல் போட்டி)

போட்டி விதிமுறைகள்

- **காந்தள் எழுச்சிக்குயில், செண்பகம் எழுச்சிக்குயில், வாகை எழுச்சிக்குயில், சிறுத்தை எழுச்சிக்குயில், வளர்ந்தோர் எழுச்சிக்குயில்** என ஐந்து பிரிவுகளாகப் போட்டி நடாத்தப்பெற்று, மிகத்திறமையாகப் பாடும் எழுவர் தெரிவு செய்யப்பெற்று **எழுச்சிக்குயில் 2025** விருதுக்கான இறுதிப்போட்டி நடைபெறும்.

- எழுச்சிக்குயில் 2025 விருதினைப் பெறும் வெற்றியாளருக்குத் தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2025 நிகழ்வில் மாவீரர் நினைவுப் பாடலைப் பாடுவதற்கான வாய்ப்பளிக்கப்படும்.

- ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் மதிப்பளிக்கப்படுவார்கள்.

- போட்டியாளர் தெரிவுசெய்யும் பாடல் எமது அங்கீகாரம் பெற்ற தமிழீழ எழுச்சிப்பாடலாக இருத்தல் வேண்டும்.

- **தெரிவுசெய்யும் மூலப்பாடலின் சுருதியிலே பாடலைப் பாடுவதே சிறப்பாகும். போட்டியாளரின் வசதி கருதி பாடலின் சுருதி குறைக்க நேர்ந்தால் ஒரு கட்டை சுருதிக்கு மேல் குறைக்க முடியாது. போட்டியாளரால் தெரிவுசெய்யும் பாடல் அவருக்கு ஏற்ற பாடலாக இல்லாதிருப்பின் பொருத்தமான பாடலைத் தெரிவுசெய்வதற்குரிய ஆலோசனைகளைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் இசைக்கட்டுப்பாட்டாளர் வழங்குவார்.**

- போட்டியாளர் இறுவெட்டுகளில் பாடிய சொந்தப் பாடலைப் போட்டியில் பாடமுடியாது.

- போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்படும் நாள்களில் பாடல் ஒத்திகைக்காக வருகைதருதல் வேண்டும்.

- போட்டியாளர் ஒருவர் தெரிவு செய்த பாடலை இன்னொரு போட்டியாளர் **(எந்தப் பிரிவிலும்)** தெரிவுசெய்ய முடியாது. முதலில் பாடலைத் தெரிவுசெய்து தபால் மூலம் அனுப்பியவருக்கே முன்னுரிமை அளிக்கப்படும்.

- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

- சுவிஸ் நாட்டில் வாழாத சுவிஸ் நாட்டின் எல்லைகளில் வாழும் போட்டியாளர்களாயின், தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்தின் கீழ் தாய்மொழி கற்கும் மாணவர்கள் மற்றும் சுவிஸ் நாட்டின் வதிவிடப்பத்திர உரிமையுடன் சுவிஸ் நாட்டின் எல்லைகளில் வாழ்பவர்கள் மட்டும் போட்டியில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

- **போட்டிக்கான விண்ணப்பப்படிவம், வதிவிட அனுமதிப் பத்திரத்தின் பிரதி, போட்டிக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு, போட்டியாளரின் நிழற்படம், தெரிவு செய்த பாடலின் எழுத்து வடிவம் மற்றும் ஒலி**(Mp3) **வடிவம் ஆகியவற்றோடு போட்டியாளர் தெரிவுசெய்த பாடலைப் போட்டியாளரின் சொந்தக்குரலிற்பாடி ஒலிப்பதிவு செய்து இணைத்துத் தபால் ஊடாக அனுப்புவதன் மூலம் போட்டியாளராக இணைந்துகொள்ளலாம்.**

- பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வயதெல்லை:

- ❖ **காந்தள் எழுச்சிக்குயில்** (01.01.2016 – 31.12.2018 வரையில் பிறந்தோர்)
- ❖ **செண்பகம் எழுச்சிக்குயில்** (01.01.2013 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)
- ❖ **வாகை எழுச்சிக்குயில்** (01.01.2010 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)
- ❖ **சிறுத்தை எழுச்சிக்குயில்** (01.01.2006 – 31.12.2009 வரையில் பிறந்தோர்)
- ❖ **வளர்ந்தோர் எழுச்சிக்குயில்** (31.12.2005 இற்கு முன் பிறந்தவர்கள்)
- ❖ **இணை எழுச்சிக்குயில்** (இரு குரல் - வயதெல்லை இல்லை)

விண்ணப்ப முடிவு நாள் : **03.05.2025 சனிக்கிழமை**

போட்டி நடைபெறும் நாள்கள் : **07,08 யூன் 2025 சனி, ஞாயிறு**

விண்ணப்பக்கட்டணம் : **தனிப்பாடல் 50CHF,**
இணை எழுச்சிக்குயில்
ஒருவருக்கு 35CHF

போட்டி நடைபெறவுள்ள முகவரி:

விண்ணப்பக்கட்டணம் செலுத்தவேண்டிய தபாற்கணக்கு இலக்கம்:
60-34553-3 TRF Swiss, 4528 Zuchwil.

மின்னஞ்சல்: trfswiss@gmail.com

இணையம்: www.trfswiss.com

முகநூல்: **www. facebook.com/ezhuchchikuyil**

அலுவலக தொலைபேசி இலக்கம்: 031 381 40 58

தொலைபேசி இலக்கம்: **076 426 27 80**